# March 29, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வரும் ஏப்.1-ஆம் தேதி முதல் பெட்ரோல் ஏற்றுமதிக்குத் தடை விதிக்க ரஷியா முடிவு செய்துள்ளது.

(i) உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யவும், விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் விதிக்கப்படும் இத் தடையானது ஜூலை 31-ஆம் தேதி வரை அமலில் இருக்கும். இதுதொடர்பான சட்ட வரைவுகளைத் தயார் செய்யுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ii) கடந்த ஆண்டில், உக்ரைனின் தாக்குதல்களால் சில ரஷிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் பாதிக்கப்பட்டதும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையுமே ரஷியாவை மீண்டும் இத்தகைய கட்டுப்பாடுகளை விதிக்கத் தூண்டியுள்ளது.

(iii) தற்போது ரஷியாவின் 'உரல்ஸ்' வகை கச்சா எண்ணெய், சர்வதேச பிரெண்ட் கச்சா எண்ணெய்க்கு நிகரான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. எனினும், முதலில் உள்நாட்டுத் தேவை; அதன்பிறகு ஒப்பந்த நாடுகள்; இறுதியாக கூடுதல் ஏற்றுமதி என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க உள்ளதாக ரஷியா தெளிவுபடுத்தியுள்ளது.

2. இந்தோனேசியாவில் 16 வயதுக்குள்பட்டோர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது.

3. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தானுக்கு 120 கோடி டாலர் கடனுதவி வழங்க சர்வதேச நிதியத்தின் அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டது.

4. நேபாளத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்தின்போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குக் காரணமான அலட்சியப் போக்கு மற்றும் வன்முறை ஒடுக்குமுறை தொடர்பாக அந்நாட்டின் முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி கைது செய்யப்பட்டார்.

(i) நேபாளத்தில் ஊழல் மற்றும் வாரிசு அரசியலுக்கு எதிராக இளைஞர்கள் கடந்த ஆண்டு செப்டம்பரில் நடத்திய போராட்டத்தின் விளைவாக, கே.பி.சர்மா ஒலி தலைமையிலான ஆட்சி கவிழ்ந்தது. இப்போராட்டத்துக்கிடையே நடந்த வன்முறைச் சம்பவங்களில் 76 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து விசாரணை நடத்திய உயர்நிலை ஆணையம், அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி, உள்துறை அமைச்சர் ரமேஷ் லெகக் ஆகியோர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்தது.

(ii) இந்நிலையில், அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இளைஞர்களின் ஆதரவு பெற்ற ராஷ்ட்ரிய சுதந்திர கட்சி 182 இடங்களை வென்று, தனிபெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. பிரதமராக ராப்' இசைக்கலைஞரும், காத்மாண்டு நகர முன்னாள் மேயருமான 35 வயது இளைஞர் பாலேந்திர ஷா பதவியேற்றார்.

(iii) இதைத் தொடர்ந்து நடைபெற்ற புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில், இளைஞர்கள் போராட்ட வன்முறை குறித்த உயர்நிலை ஆணையத்தின் அறிக்கையை உடனடியாக அமல்படுத்த முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, கே.பி.சர்மா ஒலி, ரமேஷ் லெகக் ஆகிய இருவரும் காலை கைது செய்யப்பட்டனர்.

5. ஆப்பிள் நிறுவனத்தின் சிஇஓ பதவியிலிருந்து டிம் குக் விலகத் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருக்குப் பிறகு ஆப்பிள் நிறுவனத்தின் ஹார்டுவேர் என்ஜினீயரிங் பிரிவின் மூத்த துணைத் தலைவர் ஜான் டெர்னஸ் அந்தப் பொறுப்பை ஏற்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

6. கேமரூன் நாட்டில் நடைபெற்று வரும் உலக வர்த்தக அமைப்பின் 14-ஆவது அமைச்சர்கள் மாநாட்டில், இணையவழி வர்த்தகப் பரிமாற்றங்களுக்கான சுங்க வரி விலக்கை நீட்டிப்பது தொடர்பாக இந்தியா மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு இடையே கடும் கருத்து வேறுபாடு நிலவி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(i) மின்னணு முறையில் பரிமாறப்படும் மென்பொருள்கள், மின்னணு புத்தகங்கள் மற்றும் தரவுகள் மீதான சுங்க வரி விலக்கை நிரந்தரமாக்க வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

(ii) இருப்பினும், இந்த வரி விலக்கு நீட்டிப்பால் தங்களுக்குப் பெரும் வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும், உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும் கூறி இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் இதற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளன.

(iii) இதன் காரணமாக, 2 முதல் 4 ஆண்டுகள் வரை தற்காலிகமாக இந்த வரி விலக்கை நீட்டிக்கும் வகையில் ஒரு சமரச முடிவு எட்டப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது

7. மெக்ஸிகோ நாட்டின் மெக்ஸிகோ சிட்டியில் உள்ள பிர சித்தி பெற்ற அஸ்டெகா விளையாட்டரங்கம் புனரமைப்பு பணிக்குபின் மீண்டும் 2026 உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு திறக்கப்படுகிறது. ஏற்கெனவே கடந்த 1970-இல் பீலேவின் பிரேசில் அணியும், 1986-இல் மாரடோனா தலைமையிலான ஆர்ஜென்டீனா அணியும் இங்கு உலக சாம்பியன் பட்டத்தை வென்றிருந்தன.

8. அமெரிக்காவின் டெக்ஸாஸ் நகரில் நடைபெற்ற டேவிட் நோபுள் தடகளப் போட்டியில் டெக்கத்லான் பிரிவில் 7,947 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றார் இந்தியாவின் நட்சத்திர வீரர் தேஜஸ்வின் சங்கர்.

9. இந்தியாவில் கடந்த 33 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதம் (எம்எம்ஆர்) 80 சதவீதம் வரை குறைந்துவிட்டதாக லான்செட் மகப்பேறியல், மகளிர் நோய்களுக்கான சிகிச்சை மற்றும் சுகாதார ஆய்விதழ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

(i) கர்ப்பம், மகப்பேறு அல்லது பிரசவத்துக்குப் பிந்தைய 42 நாள்களுக்குள் தாய் உயிரிழப்பது மகப்பேறு இறப்பு எனப்படுகிறது. இது ஒரு லட்சம் குழந்தை பிறப்புகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இதுதொடர்பாக லான்செட் இதழில் உலகளவில் நோய்களால் ஏற்படும் சுமை -2023 என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பாக வெளியான அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

- இந்தியாவில் 1990-இல் 1 லட்சம் குழந்தை பிறப்புகளுக்கு 508 தாய்மார்கள் இறப்பு என் றிருந்த விகிதம், 2023-இல் 116-ஆக குறைந்துள்ளது. 2023-ஆம் ஆண்டில் 24,700 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர்.
- இதே காலகட்டத்தில் பாகிஸ்தானில் 10,300 தாய்மார்களும் எத்தியோப்பியாவில் 11,900 மற்றும் நைஜீரியாவில் 32,900 தாய் மார்களும் உயிரிழந்துள்ளனர்.
- 2023-இல் உலகம் முழுவதும் 2.40 லட்சம் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். இதனால் உலக அளவிலான மகப்பேறு இறப்பு விகிதம் 190.5-ஆக உள்ளது. இது 1990-இல் 321-ஆக இருந்த நிலையில் வெகுவாக குறைந்துள்ளது.

(ii) 104 நாடுகள் இலக்கை எட்ட வில்லை:

- 2030-க்குள் மகப்பேறு இறப்பு விகிதத்தை 70-ஆக குறைக்க உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளின் - கீழ் (எஸ்டிஜி) அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 204 நாடுகளில் 104 நாடுகள் இந்த இலக்கை தற்போது வரை அடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) இந்தியாவுக்கு உலக அங்கீகாரம்:

- அண்மையில் வெளியிடப்பட்ட 2021-2023 காலகட்டத்துக்கான மாதிரி பதிவு முறையின்படி இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதம் 88-ஆக உள்ளது.
- இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை வட்டாரங்கள் கூறுகையில், 'இந்தியாவில் 1990-இல் இருந்து மகப்பேறு இறப்பு விகிதம் 86 சதவீதம் குறைந்துள்ளதாகவும் உலக அளவில் இது 48 சதவீதமாகவும் உள்ளதாகவும் அண்மையில் ஐ.நா.வின் மகப்பேறு இறப்பு மதிப்பீட்டுக் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

- இந்தியாவின் சுகாதார முன்னெடுப்புகளுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதற்கு இதுவே சான்று. இதுதொடர்பாக 2030-க்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளை இந்தியா அடைந்துவிடும்' எனத் தெரிவித்தன.

10. நாட்டின் நகர்ப்புறப் பகுதிகளில் குழாய் வழியாக விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) கட்டமைப்பின் விரிவாக்கத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) நாட்டின் நகர்ப்புறப் பகுதிகளில் பிஎன்ஜி சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பராமரிப்பது குறித்த வட்டமேசை ஆய்வுக் கூட்டம், புது தில்லியில் நடைபெற்றது.

(ii) நகர்ப்புற இந்தியாவில் பிஎன்ஜி கட்டமைப்பின் விரிவாக்கத்தை துரிதப்படுத்துவது குறித்து விரிவாக கலந்தாலோசிக்கவும், அத்தியாவசிய சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யவும் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

(iii) மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப் புறவிவகாரங்கள், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறைளின் அமைச்சர்கள், உத்தர பிரதேசம், தில்லி, மகாராஷ்டிரம், ஹரியாணா, ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

(iv) தற்போது நாட்டில் எந்த அளவுக்கு பிஎன்ஜி பயன்பாட்டில் உள்ளது, திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரி வாயுவுடன் (எல்பிஜி) ஒப்பிடுகையில் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, மலிவு விலை உள்ளிட்டவற்றில் பிஎன்ஜியின் சாதகமான அம்சங்களை சுட்டிக்காட்டி, கூட்டத்தில் மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விரிவான விளக்கத்தை அளித்தது.

(v) என்னென்ன இடர்ப்பாடுகள்?

- பிஎன்ஜி இணைப்புக்கான அனுமதிகளை அளித்தல், பிஎன்ஜி விநியோகத்துக்கான குழாய்களை அமைத்து பயன்படுத்துவதற்கு பொது நிலத்தை உபயோகப்படுத்த அரசு அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்புதல் பெறுதல் ஆகியவற்றில் நிலவும் தாமதம், பிஎன்ஜி குழாய்களை அமைக்கும் போது சாலைகள் போன்ற உள்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் சேதத்தை சீரமைக்க அதிக கட்டணம் விதித்தல் போன்ற காரணங்கள் பிஎன்ஜி சுட்டமைப்பை உரிய காலத்தில் விரிவுபடுத்துவதில் தடையாக நீடிக்கின்றன என்று கூட்டத்தில் அடையாளம் காணப்பட்டது. இதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மாநிலங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புக் கொண்டன.
- மத்திய வீட்டுவசதி துறை அமைச்சர் மனோகர் லால் கட்டர் பேசுகையில், மிகமுக்கியப்பணியாக பிஎன்ஜி கட்டமைப்பு விரிவாக்கத்தை விரைவுபடுத்த வேண்டும். நகரத் திட்டமிடலில் பிஎன்ஜி உள்கட்டமைப்பை ஒருங்கிணைத்தல், நடப்பு நகர்ப்புற வளர்ச்சி முன்னெடுப்புகளில் பிஎன்ஜி இணைப்பு கட்டமைப்பை சேர்த்தல், கடைசி மைல் வரை பிஎன்ஜி இணைப்பு வசதியை சாத்தியமாக்குதல் உள்ளிட்டவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்' என்றார்.
- புதிதாக 50 லட்சம் பிஎன்ஜி இணைப்புகளை அளிக்கும் இலக்கு குறித்தும் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.
- பிஎன்ஜி விநியோக உள்கட்டமைப்பு ஏற்கெனவே உள்ள பகுதிகளில் எல்பிஜியில் இருந்து பிஎன்ஜி பயன்பாட்டுக்குப் படிப்படியாக மாறுவதற்கு வழிவகை செய்ய கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்பட்டது. இதுகுறித்து நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. பஞ்சாப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்குத் தகுதியானவரைப் பரிந்துரைக்க தேடுதல் மற்றும் தேர்வுக் குழுவை குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அமைத்துள்ளார்.

(i) பஞ்சாப் பல்கலைக்கழகச் சட்டம் 1947-இன் 10-ஆவது பிரிவை பின்பற்றி, அந்தப் பல்கலைக்கழக

துணைவேந்தர் பதவிக்குப் பொருத்தமான மூன்று முதல் ஐந்து பேரை பரிந்துரைக்க, தேடுதல் மற்றும் தேர்வுக் குழுவை குடியரசு துணைத் தலைவரும் அந்தப் பல்கலைக்கழக வேந்தருமான சி.பி.ராதாகிருஷ்ணன் அமைத்துள்ளார்.

(ii) தேடுதல் மற்றும் தேர்வுக் குழுவின் தலைவராக மகாராஷ்டிர மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் மாதுரி கனித்கர் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிர்வாக நிறுவன துணைவேந்தர் சசிகலா வாஞ்சரி, சிஎஸ்ஐஆர்-இந்திய ரசாயன உயிரியல் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் விபா டாண்டன் ஆகியோர் அந்தக் குழுவின் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(iii) மேலும் அந்தப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தரான ரேணு சீமாவின் பதவிக்காலத்தை மேலும் 4 மாதங்களுக்கு நீட்டித்து குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஒப்புதல் அளித்துள்ளார்.

12. இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2,000 'பிரஹார்' இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளை இந்திய ராணுவத்திடம் அதானி நிறுவனம் வழங்கியுள்ளது.

(i) குவாலியரில் அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ் பேஸ் நிறுவனத்துக்கு சொந்தமான சிறிய ஆயுதத் தளவாட உற்பத்தி ஆலை உள்ளது. இந்த ஆலையில், இந்திய ராணுவத்துக்காக 'பிரஹார்' இலகுரக இயந்திரத் துப்பாக்கிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக தயாரிக்கப்பட்ட 2,000 இலகுரக இயந்திரத் துப்பாக்கிகளை ராணுவத்திடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

(ii) இதில் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள், ராணுவ மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டு, லாரிகளில் ஏற்றப்பட்ட இயந்திரத் துப்பாக்கிகளை பெற்றுக் கொண்டனர்.

(iii) இதுகுறித்து அதானி டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் நிறுவன தலைமை செயலதிகாரி ஆசிஷ் ராஜ்வன்சி கூறுகையில், '6 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆயுத தளவாடப்பணி தொடங்கியது. திட்டமிட்டதற்கு 11 மாதங்களுக்கு முன்பே இயந்திரத் துப்பாக்கிகளை தயாரித்து ஒப்படைத்து விட்டோம். அடுத்த 3 ஆண்டுகளுக்குள் ஒப்பந்தப்படி எஞ்சிய இயந்திரத் துப்பாக்கிகளும் தயாரித்து அளித்து விடுவோம் என உறுதியளிக்கிறேன் என்றார்.'

(iv) பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஏ. அன்பரசு பேசுகையில், 'பாதுகாப்புத் தளவாடங்களை தயாரித்து அளிக்கும் நிறுவனங்களுக்கு தோளோடு தோள் கொடுத்து அரசு ஆதரவு தரும்' என்றார்.

13. பிரான்ஸ் அதிபர் இமானு வெளியுறவுத்துறை அமைச்சர்எஸ். தமக்ரானை இந்திய ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

(i) கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி 7 அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெறுகிறது. இதில் பிரான்ஸ் நாட்டின் அழைப்பை ஏற்று, பார்வையாளராக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்து கொண்டுள்ளார்.

(ii) இந்த மாநாட்டின் இடையே பாரீஸில் மேக்ரானை ஜெய்சங்கர் சந்தித்தார். அப்போது அவருடன் பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசித்ததாக ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

14. பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் மின்னணு இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு ஊக்கத்தொகை பெறுவதற்கான காலஅவகாசத்தை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

(i) 2024, அக்டோபர் 1-ஆம் தேதிமுதல் 2026, மார்ச் 31 வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும் என முன்பு கூறப்பட்டிருந்தது.

(ii) இதற்கான கால அவகாசத்தை நீட்டித்து மத்திய கனரக தொழிற்சாலைகள் அமைச்சகம்

வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

- 2026, ஜூலை 31 வரை பதிவு செய்யப்படும் இருசக்கர மின் வாகனங்கள் மற்றும் 2028, மார்ச் 31 வரை பதிவு செய்யப்படும் மூன்று சக்கர மின் வாகனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.
- ரூ.10,900 கோடி மதிப்பிலான பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தில் ஊக்கத்தொகை சலுகையைப் பெற இருசக்கர மின் வாகனங்களின் தொழிற்சாலை விலை அதிகபட்சமாக ரூ.1.50 லட்சமாகவும், மூன்று சக்கர மின் வாகனங்களின் தொழிற்சாலை விலை அதிகபட்சமாக ரூ.2.50 லட்சமாகவும் இருக்க வேண்டும்.
- இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டால் அறிவிக்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்கு முன்பாகவே திட்டம் நிறுத்தப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது.
- பிரதமரின் இ-டிரைவ்திட்டத்தின்கீழ் 24.79 லட்சம் இரு சக்கர மின் வாகனங்கள் மற்றும் 39,034 மூன்று சக்கர மின் வாகனங்களுக்கு ஊக்கத்தொகை அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது